**செய்தி வெளியீடு எண்: 538** **நாள்: 29.08.2011.**

# 7– வது உணவு மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி

# (7th Food and Technology expo – 2011)

7–வது உணவு மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி –2011 (7th Food and Technology expo – 2011) பிரகதி மைதானம், புதுடெல்லியில் 29,30 மற்றும் 31.07.2011 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்தக்கண்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தனியார் நிறுவனங்களும் அரங்கங்கள் அமைத்தது. இதில் மாநிலங்களில் செயல்படுத்தும் தோட்டக்கலை வளர்ச்சி திட்டங்கள் உணவு பதப்படுத்தும் எந்திரங்கள் அவற்றின் பயன்பாடுகள் குறித்து விளம்பரங்களுடன் செயல்விளக்கமும் இடம் பெற்றது.

தமிழகத்தின் சார்பில் 18 சதுர மீட்டர் அளவில் கருத்துக்காட்சி அரங்கு அமைக்கப்பட்டு இதில் தமிழகத்தில் தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், தோட்டக்கலைப்பயிர்கள் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் ஆகியன குறித்து விளம்பர பலகைகள் வைக்கப்பட்டது.

தமிழகத்தில் குறிப்பாக ஒசூர் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கொய்மலர்கள் சாகுபடி குறித்த விளக்க படங்கள், விவசாயின் வெற்றிக்கதைகள் குறித்த கட்டுரைகள் படங்கள் வைக்கப்பட்டது, தவிர எற்றுமதி தரம் வாய்ந்த ரோஜா மலர்களால் மலர் படுக்கை (Flower Bed) மலர் கொத்து (Flower Bouquet) அமைக்கப்பட்டது. மேலும் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கார்னேசன், ஜெர்பெரா, பார்டு ஆப் பாரடைஸ், லில்லியம், ஆர்கிட்ஸ் போன்ற மலர்களால் முகப்பு தோற்ற வளைவு அமைக்கப்பட்டது. இக்கருத்துக்காட்சியில் மலர்கள் சாகுபடி குறித்த சாகுபடி குறிப்புகள் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இது தவிர மயில், தவளை, வாத்து, புறா, மீன் மற்றும் பறவைகள் ஆகியவற்றிக்கு காய்கறிகளால் ஆன சிற்பங்கள் அமைக்கப்பட்டன. இந்த காய்கறி சிற்பங்கள் (Vegetable Carving) பொது மக்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது, தமிழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட அரங்கத்திற்கு "Most Beautifully Decorated Stall" என்ற பிரிவில் முதல் பரிசு வழங்கப்பட்டது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**